**BRAMPTON** **Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

## ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது, ஜூன் மாதம் 11 ஆம் தேதி முதல் அனைத்து பூங்காக்களையும் பாதுகாப்புக்கான தடைகளுடன் திறக்கவிருக்கிறது

### *பூங்காக்கள் இரவு 10 மணிக்கு மூடப்படும்*

ப்ராம்ப்ட்டன், ON (ஜூன் 8, 2020) – பீல் பப்ளிக் ஹெல்த் அமைப்பின் வழிகாட்டுதலின் பேரில், ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது, ஜூன் 11 முதல், 500 க்கும் அதிக எண்ணிக்கையிலான அனைத்து பூங்காக்களையும் திறந்து விடவிருக்கிறது. இதில் திறந்த நிலை நிழற்குடைகளும் பிக்னிக் நிழற்குடைகளும், உட்காரும் பெஞ்சுகள், கழுத்துப்பட்டை இல்லாமல் நாய்கள் சுதந்திரமாக திரிவதற்கான பூங்காக்கள், ஒயிட் ஸ்ப்ரூஸ் பார்க் ( White Spruce Park) டிஸ்க் கோல்ஃப் மைதானங்கள், ஸ்கேட் செய்யும் பூங்காக்கள் (சிங்க்வாகௌஸி பூங்கா நீங்கலாக) ஆகியன அடங்கும். பூங்காக்கள் ஒவ்வொரு நாளும் இரவு 10 மணிக்கு மூடப்படும். டென்னிஸ் மற்றும் பிக்கிள்பால் மைதானங்கள், பீல் வில்லேஜ் கோல்ஃப் மைதானம் மற்றும் ப்ராம்ப்ட்டன் கல்லறைத் தோட்டம் ஆகியவையும்கூட திறந்திருக்கும்.

அனைத்து விளையாட்டு மைதானங்கள் மற்றும் விளையாட்டு கட்டமைப்புகள், விளையாட்டுக் களங்கள் மற்றும் வசதி அமைப்புக்கள், திறந்த வெளி உடற்பயிற்சித் தகுதிக்கான உபகரணங்கள், திறந்தவெளி நீச்சல் குளங்கள், ஸ்பிளாஷ் பேட்கள் / வேடிங் (பார்த்து ரசிப்பதற்கு மட்டுமேயான) குளங்கள், கழிப்பறைகள் மற்றும் குடிநீர் அமைப்புகள் ஆகியவை மூடப்பட்டே இருக்கும், அவை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கிடைக்கப்பெறமாட்டாது.

சமூக பாதுகாப்பை உறுதி செய்வதற்கான ஒரு கூடுதல் நடவடிக்கையாக, அனைத்து வெளிப்புற விளையாட்டு மைதானங்களும் உடற்பயிற்சித் தகுதிக்கான உபகரணங்களும் ஆரஞ்சு நிற பிளாஸ்டிக் வேலியால் தடுக்கப்பட்டு பொது மக்கள் பயன்படுத்த தடை செய்யப்படுகின்றன.

இந்தச் சமயத்தில், ஒன்ட்டேரியோ அரசாங்கத்தின் அவசரகால உத்தரவின் படி, பத்துக்கும் மேற்பட்ட நபர்களின் சமூகக் கூட்டங்கள் அனுமதிக்கப்படுவதில்லை என்பது குடியிருப்புவாசிகளுக்கு நினைவூட்டப்படுகிறது. ஜூன் 12, 2020 வெள்ளிக்கிழமையன்று விடியற்காலை12:01 முதல், மாகாணமானது, சமூகக் கூட்டங்களுக்கான எண்ணிக்கை வரம்பை ஐந்து முதல் 10 நபர்களாக அதிகரிக்கும். ஒரு குடியிருப்புவாசியானவர், எல்லா நேரங்களிலும் கூடவே வசிக்காத எவர் ஒருவரிடமிருந்தும் குறைந்தபட்சம் 2.0 மீட்டர் (அல்லது ஆறு அடி) தூரத்தை பராமரிக்க வேண்டும்.

வசதி அமைப்புக்களைத் திறந்தவுடன் கூடுதல் குப்பைத் தொட்டிகள் வைக்கப்படும், மேலும் தேவைக்கேற்ப இவற்றைச் சோதித்து குப்பைகளை அகற்றும் பணி அதிகரிக்கப்படும்.

**நிழற்குடை மற்றும் பிக்னிக் நிழற்குடை**

உடல்ரீதியான சமூக விலகல் நடவடிக்கைகள் நடைமுறையிலேயே இருந்துவரும். நிழற்குடை /பிக்னிக் நிழற்குடை ஆகியவற்றில் கூடுபவர்களின் எண்ணிக்கையானது அங்கு இருக்கும் அறிவிப்புப் பலகையில் தெளிவாக குறியீடு செய்யப்பட்ட அதிகபட்ச எண்ணிக்கைக்கு மிகாமல் இருப்பது கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்படும்.

கோவிட்-19 தொற்று பரவுவதைத் தடுக்க, மேஜை மற்றும் நாற்காலிகளுக்கான அணுகலை நகர நிர்வாக அலுவலர்கள் மட்டுப்படுத்த இருப்பதால், குடியிருப்புவாசிகள் தங்கள் சொந்த நாற்காலிகளை நிழற்குடைப் பகுதிகளில் பயன்படுத்த ஊக்குவிக்கப்படுகிறார்கள். அப்படி பயன்படுத்திய தங்கள் நாற்காலிகளைப் குடியிருப்புவாசிகள் மீண்டும் தங்கள் வீட்டிற்கு திரும்ப எடுத்துச் சென்றுவிட வேண்டும். ப்ராம்ப்ட்டன் நகர பூங்காவில் இரவு நேரத்தில் விட்டுச்செல்லப்படும் நாற்காலிகள் ஏதேனும் இருப்பின் அவை அகற்றப்பட்டு அப்புறப்படுத்தப்படும்.

அடுத்த அறிவிப்பு வரும் வரை பிக்னிக் நிழற்குடைகள் மற்றும் பூங்காவில் இருக்கும் இடங்களுக்கும் இந்தச் சமயத்தில் முன்பதிவுகள் எதுவும் செய்ய அனுமதிக்கப்படாது.

**கழுத்துப் பட்டையில்லாமல் சுதந்திரமாக நாய்கள் திரிவதற்கான பூங்காக்கள்**

ப்ராம்ப்ட்டன் நகரில் இருக்கின்ற, கழுத்துப் பட்டையில்லாமல் சுதந்திரமாக நாய்கள் திரிவதற்கான நான்கு பூங்காக்களில் அவற்றுக்கான அறிவிப்புப் பலகையில் குறியிடப்பட்ட அதிகபட்ச எண்ணிக்கையிலான நாய்கள் மட்டுமே அனுமதிக்கப்படும்.

- ப்ரமீலியா லிமிடெட் கம்யூனிட்டி பார்க் (1030 வில்லியம்ஸ் பார்க்வே)
- க்றிஸ் கிப்ஸன் பார்க் (135 மெக்லாலின் ரோட் நார்த்)
- டக்கன் பார்க் (73 வோட்டென் ஸ்ட்ரீட் ஈஸ்ட்)
- ஒயிட் ஸ்ப்ரூஸ் பார்க் (10302 ஹார்ட் லேக் ரோட்)

கழுத்துப் பட்டையில்லாமல் சுதந்திரமாக நாய்கள் திரிவதற்கான பூங்காக்கள் பற்றிய மேலும் தகவல்களுக்கு இங்கு க்ளிக் செய்யவும்

**பூங்காக்களுக்கான நல்லெண்ண தூதர் திட்டம்**

கோவிட்-19 பரவுவதைத் தடுப்பதற்கு, உடல் ரீதியான சமூக விலகலுக்கான வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதன் முக்கியத்துவத்தைப் பற்றி குடியிருப்புவாசிகளுக்கு கற்றுக்கொடுப்பதே முக்கியமான விஷயமாகும். ஜூன் 13 முதல், வார நாட்களின் இரவு நேரங்களிலும், வார இறுதி நாட்களிலும், அதிக அளவிலான மக்கள் கூடும் பூங்காக்களில் நகர ஊழியர்கள் மக்களுடன் கலந்து, குடியிருப்பு வாசிகளுக்கு சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை கூறுவார்கள்.

பெருநிறுவன பாதுகாப்பு சேவையினர் பூங்காக்களை தொடர்ந்து கண்காணிப்பார்கள். ப்ராம்ப்ட்டன் நகரின் கோவிட் -19 அவசரகால நடவடிக்கைகள் துணை சட்டத்தின் கீழாக, உடல் ரீதியான சமூக விலகலுக்கான ஒழுங்குமுறையை பின்பற்றாத நபர்களுக்கு, ஒவ்வொரு குற்றத்திற்கும் குறைந்தபட்சம் $ 500 அபராதம் விதிக்கப்படலாம். இப்படி இணக்கம் காட்டாதவர்கள் பற்றி புகாரளிக்க, குடியிருப்புவாசிகள் எண் 311 ஐ அழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**கோவிட்-19 சுகாதாரம் & பாதுகாப்பு நடவடிக்கைகள்**

சமூகத்தின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பினை மனதில் கொண்டு, ப்ராம்ப்ட்டன் நகர பூங்காக்களில் கடுமையான உடல் ரீதியான சமூகவிலகல் நடவடிக்கைகள் அமலில் இருக்கும். ஒரு குடியிருப்புவாசியானவர், தம்முடன் வசிக்காத எவர் ஒருவரிடமிருந்தும் குறைந்தபட்சம் 2.0 மீட்டர் (அல்லது ஆறு அடி) தூரத்தை எல்லா நேரங்களிலும் கடைப்பிடிக்க வேண்டும். கை கழுவுவதற்கான கிருமிநாசினி அல்லது துடைப்பான்கள் போன்ற தனிப்பட்ட கிருமிநாசினிகளை தங்களுடன் எடுத்துச் செல்லவும், அடிக்கடி கைகளை கழுவவும், இருமல் அல்லது தும்மலின்போது முழங்கையில் முகம் புதைத்தபடி அதைச் செய்யவும், நகரின் குடியிருப்புவாசிகள் கேட்டுக்கொள்கிறார்கள்.

ஆபத்துக்களைத் தொடர்ந்து கண்காணிப்பதற்காக ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது, பீல் பப்ளிக் ஹெல்த் அமைப்பு மற்றும் ப்ராம்ப்ட்டன் அவசரநிலை மேலாண்மை அலுவலகத்தில் உள்ள அதன் கூட்டாளர்களுடன் நெருக்கமாக செயல்படுகிறது. வழக்கமான புதுப்பிப்புகளுக்கு www.brampton.ca/covid19 ஐப் பார்வையிடவும், மற்றும் எந்த நேரத்திலும் பிராம்ப்டன் நகர நிர்வாகத்தையும் பீல் பகுதியையும் தொடர்பு கொள்ள எண் 311 ஐ அழைக்கவும்.

**அறிஞர் கூற்றுக்கள்**

" வானிலையில் இதமான வெப்பம் ஏற்படுகையில், குடியிருப்புவாசிகள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி புதிய காற்றை அனுபவிக்க விரும்புவார்கள் என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம். வசதி அமைப்புக்களை திறந்துவிடுவது எப்போது பாதுகாப்பானது என்று நாங்கள் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக, பீல் ப்ப்ளிக் ஹெல்த் அமைப்புடன் நாங்கள் நெருக்கமாக பணியாற்றி வருகிறோம். நமது சமூகத்தின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பே எங்கள் முன்னுரிமையான விஷயமாக உள்ளது; மேலும் குடியிருப்புவாசிகள் பூங்காக்களுக்குச் சென்று அனுபவிக்கும் போது வழிகாட்டுதல்களை மதித்து, நமது பூங்காக்களில் உடல் ரீதியான சமூக விலகலைக் கடைப்பிடிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்."

- *பேட்ரிக் ப்ரவுன்,மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ மீண்டும் திறத்தல் மற்றும் மீட்புக்கான செயற்குழு மூலம், எங்கள் வசதி அமைப்பு கட்டிடங்கள் மற்றும் வசதி அமைப்புக்களை மீண்டும் திறப்பதற்கான விரிவான அணுகுமுறையை உறுதி செய்வதற்காக, சமுதாயத்தினருடன் தொடர்ந்து அர்த்தமுள்ள கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகிறோம். உடல்நலம் மற்றும் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்கும் அதே வேளையில், குடியிருப்புவாசிகள் மற்றும் நகரின் அனைத்து பங்களிப்பாளர்களின் தேவைகளையும் கவனத்துடன் சரிசமம் ஆக்குவதையும் நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம். ”

- *மார்ட்டின் மெடெய்ரோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 3 & 4 ; தலைமைப்பொறுப்பு, மீண்டும்திறத்தல் மற்றும் மீட்புக்கான பணிக்குழு, ப்ராம்ப்ட்டன் நகரம்*

"ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகத்திற்கும் எங்கள் ஊழியர்களுக்கும், நகர சேவைகள் மற்றும் வசதிகளை பாதுகாப்புடன் மீண்டும் திறப்பது என்பதே முதன்மையான விஷயமாகும். நகர சேவைகளை பொதுமக்களுக்கு பொறுப்புடனும் மற்றும் பாதுகாப்புடனும் மீண்டும் திறந்துவிடுவதை உறுதி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை நாங்கள் தொடர்ந்து மேற்கொள்வோம். ”

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

"கோடைக்காலம் வரவிருக்கும் இந்த சமயத்தில், கழுத்துப்பட்டை இல்லாமல் நாய்கள் சுதந்திரமாக திரிவதற்கான பூங்காக்கள் போன்ற திறந்தவெளி இடங்களை படிப்படியாக மீண்டும் திறப்பது என்பது குடியிருப்புவாசிகளுக்கு வெளியே செல்வதற்கான வாய்ப்பளிக்கும். இது உடல்ரீதியான செயல்பாடு மற்றும் மனரீதியான நல்வாழ்வை மேம்படுத்த உதவும், என்றாலும், வசதி அமைப்புக்கள் திறந்துவிடப்பட்டன என்பதற்காக நாம் கவனக்குறைவுடன் இருப்பது சரி என்று அர்த்தமல்ல என்பதை நினைவில் கொள்வது அவசியம். கோவிட்-19 தொற்று பரவுவதைத் தடுக்க, குடியிருப்புவாசிகள் தொடர்ந்து பரிந்துரைகளைப் பின்பற்றியாக வேண்டும். ஒருவருக்கொருவர் இரண்டு மீட்டர் தொலைவில் இருப்பது, அந்தந்த வசதி அமைப்புகளில் அதிகபட்ச மக்கள் மற்றும் நாய்களுக்கான எண்ணிக்கையைக் கடைப்பிடிப்பதன் மூலம் கூட்டத்தைத் தவிர்ப்பது, அடிக்கடியும் மற்றும் ஒவ்வொரு வருகைக்குப் பிறகும் கைகளைக் கழுவுதல், மற்றும் சோதனைக்கு உட்படுத்தப்படுதல் மற்றும் நோய்வாய்ப்பட்டிருந்தால் வீட்டில் தங்கிவிடுவது ஆகிய இவையனைத்தும் நாம் முன்னோக்கிச் செல்வதற்கான முக்கிய விஷயங்களாகும். "

- *டாக்டர். லாரன்ஸ் லோஹ், இடைக்கால சுகாதார மருத்துவ அதிகாரி, பீல் ப்ப்ளிக் ஹெல்த் அமைப்பு*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது**. நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் பரிமாற்றம்
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca